# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஜூன் 10, 2023 Weekly E-paper ● June 10, 2023




## கலைஞரின் கனவைக் காலம் நிறைவேற்றும்!

சுப.வீரபாண்டியன்

### ஒடிசா இரயில் விபத்தும் உக்ரைன் போரும்!

பேராசிரியர் புருனோ சந்திரசேகர்

### ஆளுநர் போர்வை ஆர்.எஸ்.எஸ். வேலை!

தலையங்கம்

### அதானியும் மோடியும் அம்பலப்படுத்திய வாஷிங்டன் போஸ்ட்!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஜூன் 10, 2023 Weekly E-paper ● June 10, 2023


# கலைஞரின் கனவைக் காலம் நிறைவேற்றும்!

சுப.வீரபாண்டியன்

சில நாள்களுக்கு முன்பு, சென்னையில் நடைபெற்ற, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய, திமுக தலைவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராகிய நம் தளபதியவர்கள் குறிப்பிட்டுள்ள ஒரு செய்தி மிகப்பெரிய வரலாற்றுச் சிறப்புடையது!

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் யார், யார் வெற்றி பெற வேண்டும் என்பதைவிட, யார் வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்து விடக்கூடாது என்பது முக்கியமானது என்று கூறியிருக்கிறார்.

இது எதிர்மறைச் சிந்தனை இல்லையா என்று தோன்றும். எதிர்மறைச் சிந்தனைதான். ஆனால் சில நேரங்களில், வரலாற்றில் இப்படிப்பட்ட சிந்தனைகள் தேவைப்பட்டு இருக்கின்றன!





பொது எதிரியை வீழ்த்துவதற்கு, கருத்து வேறுபாடுகள் உள்ள கட்சிகள் கூட ஒருங்கிணைந்து நின்று, களத்தைச் சந்திப்பது இயல்பானதும், தேவையானதுமாகும்! இன்றைய உடனடித் தேவை, ஒரு தீய சக்தியை ஆட்சியில் இருந்து அகற்றுவதுதான் என்பதை உணர்ந்து நம் தலைவர் பேசியிருக்கிறார்!

இது எப்படிக் கலைஞரின் கனவாகும் என்ற ஐயமும் எழலாம். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா வழியில் நின்று தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டில் உருவாக்கியுள்ள சமத்துவ, சமூக நீதிச் சிந்தனைகள் நிலைபெற வேண்டும் என்பது அவருடைய கனவாகத்தானே இருக்க முடியும்! அவை தொடர்ந்து நிலைத்திட வேண்டுமானால், அவற்றைக் குலைக்கிற, அழிக்கத் துடிக்கிற ஒரு கட்சி ஒன்றிய அரசில் ஆட்சியில் இருக்கக் கூடாது என்பதுதானே சரியானது!

இன்றைக்கும் தமிழ்நாட்டில் நடப்பதைப் போல், சுயமரியாதை, சாதி மறுப்புத் திருமணங்கள் வடநாட்டில் வெளிப்படையாகப் பொதுவான அரங்குகளில், அவ்வளவு எளிதாக நடந்து விட முடியாது! தமிழ்நாட்டில் இருப்பது போல் கடவுள், மதம் தொடர்பான வெளிப்படையான விவாதங்கள் வடநாட்டில் நடக்க வாய்ப்பில்லை. இவை ரியல் திராவிட இயக்கம் தமிழ்நாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள்!

இப்போதும் கூட 14, 17 வயதுப் பெண்களுக்குத் திருமணம் ஆவதும், அவர்கள் கருவுற்று இருப்பதும் மனுநீதி ஏற்றுக்கொண்டு உள்ள ஒன்றுதான் என்று குஜராத் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது! மனுநீதியே இன்றைக்கும் ஆரியப் பார்ப்பனச் சட்டமாக அங்கு உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் சமூக நீதிக்குத்தான் என்றும் தலைமையிடம் என்பதை நாம் அறிவோம்!

மனுநீதியைத் தங்களின் சட்டமாக வைத்திருக்கும் ஆர்எஸ்எஸ் ஆட்சி, மறுபடியும் ஏற்பட்டு விடாமல் தடுப்பதுதான் கலைஞரின் நினைவை நாம் போற்றுவதாகும் என்று முதலமைச்சர் கூறியிருக்கிறார். அதனை நெஞ்சில் கொண்டு, இன்றிலிருந்தே பணியாற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் நம் அனைவருக்கும் இருக்கிறது!

அதற்கு ஏற்ற சூழலும் இந்திய அளவில் இன்று கனிந்து வருகிறது! பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் வரும் 23ஆம் தேதி பாட்னாவில் கூட்டி இருக்கும் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் இந்த வெற்றிக்கு வழி வகுக்கக் கூடியது! மேற்கு வங்கத்தில் எதிரும் புதிருமாக பிரிந்து நின்ற காங்கிரஸ், திருணமூல் காங்கிரஸ் ஆகிய கட்சிகளையும், கேரளாவில் போட்டியிடும் காங்கிரஸ் – கம்யூனிஸ்ட் கட்சிகளையும் ஒரே அரங்கிற்குள் அவர் கூட்டி வருகிறார்! திமுக, ஆம் ஆத்மி போன்ற வலிமையான கட்சிகளும் அன்று பங்கேற்கின்றன. அந்தக் கூட்டம், ஒரு நம்பிக்கைக் கீற்றை நாட்டுக்குத் தந்திருக்கிறது!

இந்தியா முழுவதும் தாங்களே வலிமையாக இருப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை பிஜேபி ஏற்படுத்த முயன்றாலும் உண்மை அப்படி இல்லை! ஏற்கனவே தென்னிந்தியா முழுவதும் அவர்கள் துடைத்து எறியப்பட்டு இருக்கிறார்கள்! வடஇந்தியாவிலும் கூட, பஞ்சாப், ராஜஸ்தான், தில்லி, பீகார் முதலிய மாநிலங்களில் அவர்களின் ஆட்சி இல்லை. மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், ஆட்சியை அவர்கள் குறுக்கு வழியில் தான் பெற்றிருக்கிறார்கள். எனவே உத்தர பிரதேசம்,குஜராத் தவிர அவர்கள் வலிமையாக அமர்ந்திருக்கும் பெரிய மாநிலங்கள் வேறு எதுவும் இல்லை!

அனைவரும் ஒன்று கூடி உழைத்தால், கைக்கெட்டும் தொலைவில்தான் வெற்றி இருக்கிறது! நம்பிக்கையோடு இருப்போம், கலைஞரின் கனவைக் காலம் நிறைவேற்றும்! ●

# ஒடிசா இரயில் விபத்தும் உக்ரைன் போரும்!

**பேராசிரியர் புருனோ சந்திரசேகர்**

ஒடிசா இரயில் விபத்திற்கும் உக்ரைன் போருக்கும் ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனால், ஒரு சாமானிய மனிதனுக்கு அவை ஏற்படுத்தும் தாக்கங்கள் ஒன்றே.

ஜூன் 2 ஆம் தேதி மாலை பாலசோர் - பத்ரக் இரயில் நிலையங்களுக்கு இடையே மூன்று இரயில்கள் ( கோரமண்டல் அதிவிரைவு வண்டி, பெங்களூரு - ஹவுரா விரைவு வண்டி மற்றும் சரக்கு வண்டி) மோதியதால் ஏற்பட்ட விபத்தைக் கண்டிப்பாக எவராலும் மறக்க முடியாது.

இந்த அரை நூற்றாண்டில் காணாத, ஒரு பெரும் விபத்து இது. கிட்டத்தட்ட 290 உயிரிழப்புகள் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இது விபத்தா? கவனக்குறைவா? அல்லது சதியா? என்பதை விசாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. விபத்திற்குக் காரணமானவர்கள் தண்டனையில் இருந்து தப்பிக்கலாம் அல்லது தண்டிக்கப்படலாம். அதைக் காலம்தான் முடிவு செய்யும். ஆனால் சமீப

> “கடந்த 2017 முதல் 2021 வரை மட்டும் 1392 முறை ரயில்கள் தடம்புரண்டுள்ளன. இது ஒன்றும் கற்பனை அல்ல., சிஏஜியின் அறிக்கை.”

காலங்களில் இந்திய ரயில்வே துறையின் சில செயல்பாடுகளை நாம் கவனிக்க வேண்டும். கடந்த 2017 முதல் 2021 வரை மட்டும் 1392 முறை ரயில்கள் தடம்புரண்டுள்ளன. இது ஒன்றும் கற்பனை அல்ல, சிஏஜியின் அறிக்கை. ஒன்று, இரண்டு அல்ல, 1392 முறை. இத்தனை முறை இரயில்கள் தடம் புரண்ட பிறகும் அதை சரி செய்ய ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை ஒன்றிய அரசால் பட்டியலிட முடியுமா?

உலகில் மிகப்பெரிய ஒன்றிய அரசு நிறுவனமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்திய இரயில்வே துறையில் இன்று மூன்று லட்சம் பணியிடங்கள் காலியாக உள்ளன. குளிரூட்டப்பட்ட பெட்டியில் செல்பவர்களுக்குப் போர்வை எடுத்துத் தரும் பணி காலியாக இருந்தால் கூட பரவாயில்லை, ஆனால் இந்த மூன்று லட்சம் பணியிடங்களில் இரண்டு லட்சம் பணியிடங்கள் பயணிகள் பாதுகாப்பு தொடர்புடையவை. ஏன் அந்தப் பணியிடங்கள் இன்றும் நிரப்பப்படவில்லை என்று ஒன்றிய அரசு பதிலளிக்குமா?

கடந்த பிப்ரவரி 8 அன்று தென் மேற்கு மண்டலத் தலைமைச் செயற்பாட்டு மேலாளர் ஒன்றிய அரசிற்கு ஒரு கடிதம் அனுப்பினார். அந்தக் கடிதத்தில் தென்மேற்கு மண்டலத்தில் இரயில்வே சிக்னல்கள் தொடர்ச்சியாகப் பழுதடைந்து வருவதாகவும் அதன் காரணமாக விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்து இருந்தார். அந்த கடிதத்திற்குப் பிறகாவது, ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

ரயில்களில் விபத்தைத் தடுக்க ‘கவச்’ எந்திரம் பொருத்தப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்தது, விளம்பர நோக்கமா? அல்லது மக்கள் நலன் நோக்கமா?. மக்கள் நலன் தான் நோக்கம் என்றால் 13,200 இரயில் எஞ்சின்களில் வெறும் 65 எஞ்சின்களில் மட்டுமே கவச் எந்திரம் பொருத்தப்பட்டது ஏன்? இந்த எண்ணிக்கை 0.5% விடக் குறைவு என்பது வருத்தத்திற்கு உரியதாகும்.

உக்ரைனில் போர் ஏற்பட்ட பொழுது, அங்கு உள்ள இந்தியர்களைக் குறிப்பாக மருத்துவம் படிக்கும் மாணவர்களை இந்தியா அழைத்து வர ஏற்பட்ட பிரச்சினைகளை நாம் அறிவோம். ஏர் இந்தியா பொதுத்துறை நிறுவனத்தைத் தனியாருக்கு விற்றதால் ஏற்பட்ட நிலை அது. உக்ரைனில் இருந்து அவர்களை அழைத்து வர எந்தத் தனியார் விமான நிறுவனமும் முன்வரவில்லை. ஒரு வேளை ஏர் இந்தியா பொதுத்துறை நிறுவனமாக இருந்திருந்தால், அரசு உத்தரவுப்படி நாம் இந்தியர்களை அழைத்து வந்திருக்க முடியும். ஆனால், கடைசியில் ராணுவ விமானங்களின் உதவியுடன் தான் நாம் அவர்களை அழைத்துவர முடிந்தது. அரசு நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பதன் அவசியத்தை ஒன்றிய அரசு உணருமா?.

ஒடிசாவில் இரயில் விபத்து ஏற்பட்ட பொழுது கூட, அரசு இயந்திரங்கள் தான் மீட்பு பணியில் ஈடுபட்டன. இரயில்வே துறையைத் தனியாரிடம் ஒப்டைக்கத் திட்டமிடுகிறது ஒன்றிய அரசு என்தை அறிகிறோம். தனியார்வசம் இரயில்வே இருந்து, ஒடிசா விபத்து ஏற்பட்டிருந்தால் தனியார் நிறுவனம் உதவிக்கரம் நீட்டுமா?

கொரானா காலகட்டத்தில் 50% பயணிகளோடு மட்டுமே பேருந்து இயக்கப்பட வேண்டும் என்று அரசு சொன்ன பொழுது, அது தங்களுக்கு இலாபத்தைத்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

கருஞ்சட்டைத் தமிழர்

## ஆளுநர் போர்வை ஆர்.எஸ்.எஸ். வேலை!

ஒன்றிய அரசின் பரிந்துரையின்படி ஆளுநர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டாலும், அவர் மாநில அரசின் கட்டுப்பாட்டுக்குள்தான் செயல்பட வேண்டும்.

அரசியல் சாசனப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மாநில அரசைவிட ஆளுநரின் அதிகாரம் பெரிதல்ல. உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் இதை உறுதி செய்கின்றன.

இது இப்படி இருக்க ஆளுநர் ஆர்.என்.ரவி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.கழக அரசுக்கு எதிராக, தனியொரு 'ராஜாங்கத்தை' நடத்த முயன்று கொண்டிருக்கிறார், ஓர் அரசியல்வாதியைப் போல.

தொடர்ந்து சனாதனம், ஒரே நாடு, ஒரே கலாசாரம், திராவிட மாடல் முடிந்துவிட்டது போன்ற அரசியலைப் பேசுகிறாரே ஒழிய ஓர் ஆளுநராகப் பேசியதும் இல்லை, நடந்து கொண்டதும் இல்லை.

அண்மையில் நீலகிரி ராஜ்பவனில் துணைவேந்தர்களைத் தன்னிச்சையாகக் கூட்டி வைத்து பேசியதும் கூட அப்படித்தான் இருக்கிறது.

தமிழ்நாடு முதல்வர் அந்நிய முதலீடுகளை ஈர்த்துத் தமிழ்நாட்டில் தொழில் முனைவோர்களைக் கொண்டுவர வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தார். இது முதல்வர் என்ற முறையில் அவரின் கடமை. அதைச் செய்திருக்கிறார், சரியாக.

ஊட்டியில் ஆளுநர் பேசுகிறார், வெளிநாட்டிற்குச் சென்றால் முதலீடு வந்துவிடுமா? என்று.

ஆளுநரே, உமக்கேன் இந்தக் கவலை? குஜராத் முதல்வராக இருந்த மோடியும் கூட, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு இதே வேலைக்குச் சென்றாரே. அதையும் சேர்த்து சொல்லி இருக்கலாமே.

தேசியக் கல்விதான் சரியானது, நாட்டுக்கு உகந்தது. தமிழ்நாட்டின் கல்வியின்தரம் சரிந்து விட்டது. ஆகவே தேசியக் கல்விக் கொள்கையைப் பரிசீலிக்க வேண்டும் என்பது போலப் பேசியும் இருக்கிறார் அவர்.

ஒன்றிய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியின்படி இந்திய ஒன்றிய அளவில் சென்னை மாநிலக் கல்லூரி 3ஆம் இடத்திலும், கோவை பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் கல்லூரி 4 ஆம் இடத்திலும், சென்னை இலயோலா கல்லூரி 7ஆம் இடத்தில் இருக்கிறது என்றால், தமிழ்நாட்டில் கல்வியின் தரம் குறைந்தா இருக்கிறது.

மாநிலக் கல்விக் கொள்கைதான் தமிழ் நாட்டுக்கு உரியது.

ஆளுநர் ரவி எதுவும் தெரியாமல் பேசவில்லை. எல்லாம் தெரிந்தேதான் பேசுகிறார். தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ். ஏஜன்ட் வேலையைப் பார்ப்பதை நிறுத்திக் கொண்டு அண்ணாமலையைப் போல் அரசியல் வாதியாக வரட்டும்.

அதை விட்டுவிட்டு ஆளுநர் போர்வையில் ஆர்.எஸ்.எஸ். வேலை பார்க்க வேண்டாம்.

இப்பொழுது அவர் பதவி விலக வேண்டும். அல்லது மக்கள் சக்தி அவரைப் பதவியில் இருந்து விலக்க வேண்டும்!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு: திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...

தராது என்று பேருந்துகளை இயக்க மறுத்தவர்கள் தான் இந்தத் தனியார் முதலாளிகள் என்பதை நாம் மறக்கக் கூடாது. ஒடிசா இரயில் விபத்தின்போது, பாதிக்கப்பட்டவர்களை மீட்க, சென்னையிலிருந்து ஒடிசா செல்ல முயன்றவர்களுக்கு விதித்த விமானக் கட்டணத்தின் விலை ரூ.69, 000. கேட்கவே மனம் அஞ்சுகிறது. தனியார் முதலாளிகளுக்கு இலாபம் தான் குறிக்கோளே தவிர, மக்கள் சேவை அல்ல.

> **“ஒடிசா இரயில் விபத்தின்போது, பாதிக்கப்பட்டவர்களை மீட்க, சென்னையிலிருந்து ஒடிசா செல்ல முயன்றவர்களுக்கு விதித்த விமானக் கட்டணத்தின் விலை ரூ.69,000. கேட்கவே மனம் அஞ்சுகிறது.”**

காங்கிரசு ஆட்சியும் பா.ஜ.க. ஆட்சியும் ஒன்றுதான்; திமுக ஆட்சியும் அதிமுக ஆட்சியும் ஒன்றுதான் என்று சில 'அறிவு ஜீவிகள்' பேசுவார்கள். ஆனால், ஒடிசா இரயில் விபத்தும் உக்ரைன் போரும் உணர்த்துவதும் ஒன்றுதான். நாம் யாரால் ஆளப்படுகின்றோம் என்பது மிக முதன்மையானது. அவர்கள் விளம்பர விரும்பிகளா அல்லது மக்கள் நலன் கருதிச் சிந்திப்பவர்களா? பெண்களுக்கு வழங்கப்படும் நாப்கின்களுக்கு அதிக வரி விதிப்பவர்களா அல்லது பெண்கல்வியை ஊக்குவிப்பவர்களா? மத அரசியல் செய்பவர்களா அல்லது சனநாயகத்தை விரும்புபவர்களா?

●

# அதானியும் மோடியும் அம்பலப்படுத்திய வாஷிங்டன் போஸ்ட் !

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

பாஜக ஆட்சியில் கேசுபாய் படேல் குஜராத் முதல்வராக இருந்தபோது முந்த்ரா துறைமுகத்தை 30 ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் அதானி பெற்றார். அடுத்து முதல்வரான மோடி கேசுபாய் படேல் அணியைச் சேர்ந்தவர் என்று கவுதம் அதானியை ஒதுக்கினார். ஆனால் கோத்ரா கலவரத்திற்கு பிறகு பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் குஜராத்தைப் புறக்கணித்த போது மிகப்பெரிய முதலீடுகளை குஜராத்துக்கு வரவழைப்பேன் என்று உறுதியளித்த அதானியை மோடிக்குப் பிடித்துப் போனது.

தன் மீதான கோத்ரா வன்முறைக் கறையைச் சுத்தம் செய்ய நினைத்த மோடி முந்த்ரா துறைமுகத்தை ஒட்டிய 140 சதுர மைல் நிலத்தைச் சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்காகச் சகாய விலையில் அதானிக்கு ஒதுக்கினார். அன்று முதல் அதானி மோடியோடு சேர்ந்து வளரத் தொடங்கினார்.

தனது கார்ப்பரேட் ஜெட் விமானத்தை முதல்வர் மோடியின் தேர்தல் பரப்புரைக்காக அளித்தார் அதானி. கைமாறாக குஜராத்தின் தொழிற்கொள்கைகள் அதானிக்காகத் தளர்த்தப்பட்டன. பிரதமராக மோடி பொறுப்பேற்றதும் மேற்கொண்ட பிரான்ஸ் முதல் கனடா வரையிலான அலுவல் பயணங்களில் அதானியும் உடன் சென்றார். அதன் மூலம் பங்களாதேஷ் மின் விநியோகத் திட்டம், ஆஸ்திரேலியா, இந்தோனேசியா போன்ற வெளிநாடுகளில் நிலக்கரி சுரங்கங்கள், இலங்கை காற்றாலை மின் திட்டம் என அயல்நாடுகளில் பல்வேறு தொழில் வாய்ப்புகளை அதானி குழுமம் பெற்றது.

இந்தச் சூழலில் அதானியின் வணிக வளர்ச்சிக்காக மோடி அரசு செய்த உதவிகள் குறித்து குறிப்பிட்டு அமெரிக்காவின் "வாஷிங்டன் போஸ்ட்" நாளிதழ் புகார் கூறியிருப்பது புயலைக் கிளப்பியுள்ளது. சத்தீஸ்கர் ஹஸ்தேவ் வனப்பகுதியில் 500 கோடி டன் நிலக்கரி வளம் உள்ளதாக மதிப்பிடப்பட்டு அங்கு நிலக்கரி சுரங்கம் அமைக்க 1,880 ஏக்கர் நிலத்தை மோடி அரசிடம் இருந்து அதானி குழுமம் பெற்றதாகவும், அதற்காக ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டப்பட்டுள்ளதாகவும்,


The Washington Post

In Modi's India, an empire built on coal

ஏராளமான விலங்குகள் வாழ்விடத்தை இழக்கும் நிலை உருவாகி உள்ளதாகவும் அந்நாளிதழ் குற்றம் சாட்டியுள்ளது.

ஹஸ்தேவ் வனப்பகுதியில் மரங்களை வெட்டுவதற்கும் நிலக்கரி மாசு ஏற்படுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்த தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் மோடி அரசு வருமான வரி சோதனை நடத்தியதாகவும், ஆக்ஸ்பாம் இந்தியா, கொள்கை ஆராய்ச்சி மையம், என்விரோனிக்ஸ் அறக்கட்டளை போன்ற தொண்டு நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து நன்கொடை வருவதை மோடி அரசு தடுத்ததாகவும், இதன் காரணமாக லைப் தொண்டு நிறுவனம் உள்ளிட்ட பல தொண்டு நிறுவனங்கள் ஒன்றிய அரசால் முடக்கப்பட்டதாகவும், சுரங்க திட்டத்தை எதிர்த்த சுற்றுசூழல் செயற்பாட்டாளர் அலோக் சுக்லாவின் செல்போன் பெகாஸஸ் மென்பொருள் மூலம் ஒட்டுக் கேட்கப்பட்டதாகவும் "வாஷிங்டன் போஸ்ட்" ஆதாரத்துடன் தெரிவித்துள்ளது.

ஒன்றியத்தை ஆளும் மோடி அரசின் அனுமதியுடன் அதானி பவர் நிறுவனம் ஜார்கண்ட் கொட்டா மாவட்டத்தில் அமைத்த அனல் மின் நிலையத்திற்காக ஏழை மக்களின் தென்னந்தோப்பு, வயல்வெளிகள் புல்டோசர்கள் கொண்டு அழிக்கப் பட்டதாகவும், 10 கிராமங்களை சேர்ந்த மக்களை பலவந்தமாக வெளியேற்றி 1,214 ஏக்கர் நிலம் அபகரிக்கப்பட்டதாகவும், கொட்டா மின் நிலையத்தை எதிர்த்த தொண்டு நிறுவனங்களும் மோடி அரசால் வருமான வரி சோதனைக்கு ஆளானதோடு திட்டத்தை எதிர்த்த தன்னார்வலர் ஸ்ரீதர் அரசு இயந்திரங்களால் மிரட்டப்பட்டதாகவும், அரசின் அதானி சார்புக்கு ஆட்சேபம் தெரிவித்த உயரதிகாரிகள் தூக்கியடிக்கப்பட்டதாகவும் திடுக்கிடும் தகவல்களை வாஷிங்டன் போஸ்ட் நாளிதழ் அம்பலப்படுத்தியுள்ளது.

சமரசமற்ற செய்திகளை வழங்கி பல தருணங்களில் மோடி அரசை நெளிய வைத்த என்.டி.டி.வி நிறுவனத்தின் கணிசமான பங்குகளைக் கொல்லைப் புறமாக வாங்கித் தன்வசமாக்கி உள்ளது அதானி குழுமம். இப்படி இந்தியாவில் ஊடகங்கள் இவர்கள் பிடியில் இருக்கிற நிலையில், வெளிநாட்டு நாளிதழ் இங்கு நடப்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

மோடி தலைமையிலான அரசு அதானி குழுமத்திற்கு ரூ.82 ஆயிரம் கோடிக்குச் சலுகை வழங்கியுள்ளது மட்டுமின்றி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அரசு அதிகாரிகளையும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் குறி வைத்து மிரட்டி இருப்பது பற்றிய இந்த "வாஷிங்டன் போஸ்ட்" புலனாய்வுக் கட்டுரை இந்திய மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றியத்தில் இந்த ஆட்சி தொடர்ந்தால் இந்தியா சர்வாதிகாரத்தின் கோரப் பிடியில் சிக்கி விடும். 2024 நாடாளுமன்றத் தேர்தலே நமக்கான இறுதி வாய்ப்பு என்பதை அனைவரும் உணர வேண்டும்.

மக்களைத் திரட்டுவோம் !

மோடி ஆட்சியை விரட்டுவோம் !! •




Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian